# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,963 — 1918 ம் வருஷம் ஆவணிமீ 30 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV. — நான்காம் பாகம்.

### தேசாதிபதியவர்களால் பிரசித்தம்.

பெரிய பிரித்தானியாவும் அயர்லந்தும்சேர்ந்த ஐக்கிய இராச்சியத்திற்கும் கடல்களுக்கப்பாலுள்ள ஆதிபத்திய நாடுகளுக்கும் அரசரும் சமயபரிபாலகரும் ஆகிய மகத்துவநாயக ஐந்தாம் ஜோர்ஜ் அவர்களின் நாமத்தினாலே :

மகா மகிமைபொருந்திய சென்ற் மைக்கேல் அன்ட் சென்ற் ஜோர்ஜ் வரிசையின் கொம்பானியன் பட்டத்தினரும்
இலங்கைத்தீவுக்கும் அதைச்சார்ந்த நாடுகளுக்கும் ஆட்சி யதிகாரியுமாகிய சங்கைக்குரிய
றெஜினல்ட் எட்வெட் ஸ்ற்றப்ஸ் அவர்கள் செய்யும்

### விளம்பரம்.

ஆர். ஈ. ஸ்ற்றப்ஸ்.

நுவரெலிப்பிரிவின் பாடசாலைச் சங்கத்தவர்களால், 1907 ம் ஆண்டின் நாட்டுப்புறத்துப் பாடசாலைச்சட்டத்தின் 19 ம் பிரிவின்படி சில உபவிதிகளுண்டாக்கப்பட்டு அவை மேற்படி சட்டத்தின் 20 ம் பிரிவின் 2 ம் கீழ்ப்பிரிவின்படி பெலப்பிக்கப்பட்டு 1909 ம் ஆண்டு ஒக்ற்ரோபர்மாதம் 15 ந் தேதியின் விளம்பரங்கொண்டு 1909 ம் ஆண்டு ஒக்ற்ரோபர் மாதம் 22 ந் தேதியின் அரசாட்சிக் "செசட்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதனாலும் :

மேற்சொல்லிய பாடசாலைச் சங்கத்தவர் சொல்லப்பட்ட உபவிதிகளில் 2 ம் 5 ம் உபவிதிகளை நீக்கி 1917 ம் ஆண்டின் 34 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான மேற்குறித்த சட்டத்தின் 20 (1) (*a*) ம் 20 (1) (*b*) ம் பிரிவுகளின்படி இதன்கீழ்க் காணப்படும் அட்டவணையிற் காட்டும் உபவிதிகளை அவற்றினிடத்தி லுண்டாயிருக்கிறபடியினாலும் :

இலங்கை யாட்சி யதிகாரியாகிய நாம் மேற்சொல்லிய சட்டத்தின் 20 (2) ம் பிரிவின்படி எமக்குக் கிடைத்த தத்துவத்தைக்கொண்டும் அதிகார மந்திரசபையாரது ஆலோசனையோடும் மேற்கூறிய 2 ம் 5 ம் உபவிதிகளை நீக்கியதையும் குறித்த பாடசாலைச் சங்கத்தவராற் செய்யப்பட்டு இதன்கீழ்க் காணப்படும் அட்டவணையிற் காணும் உபவிதிகளையும் பெலப்பிக்கின்றேம் என்பதை நீவிர் அறிந்துகொள்வீராக.

எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு ஆகஸ்ற்மாதம் இருபத்துமூன்றாந் திகதியில் இலங்கைத்தீவிற் கண்டியில் கொடுக்கப்பட்டது.

உத்தமனாரது கட்டளைப்படி,

ஏ. எஸ். பெக்டன்,
அக்ற்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கடவுள் அரசரைக் காத்தருளுக.

அட்டவணை.

2 வது உபவிதி.—பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டிய பிள்ளைகள்.—ஆறு வயதுக்குக் குறையாததும் பதினாறு வயதுக்கு மேல்படாததுமான ஒவ்வொரு பையனினது பெற்றாரும், ஆறு வயதுக்குக் குறையாததும் பன்னிரண்டு வயதுக்கு மேல்படாததுமான ஒவ்வொரு பெண்பிள்ளையின் பெற்றாரும் (மகமதிய அல்லது தமிழ்பெண்களானால் 6 வயதுக்குக் குறையாமலும் 10 வயதுக்கு மேல்படாமலு மிருக்கிற பிள்ளைகளின் பெற்றார்) அப்படிப்பட்ட பையனின் அல்லது பெண்பிள்ளையின் கல்விப்பயிற்சிக்குப் போதியதும் பொருத்தமுமான ஒழுங்குகள் பண்ணினாலன்றி, அல்லது பள்ளிக்கூடத்துக்கு வராதிருக்க நியாயமான மன்னிப்பு இருந்தாலன்றி, அப்படிப்பட்ட பையனை அல்லது பெண்பிள்ளையை இதனோடு அணைபட்டிருக்கும் இடாப்பில் விபரித்திருக்கும் பள்ளிக்கூடமொன்றில் சேர்ந்து படிக்கப்பண்ண வேண்டும்.

5 வது உபவிதி.—ஆயினும் 10 ம் 14 ம் வயசுக்கிடையிலுள்ள ஒரு பிள்ளை கிராமச்சங்கத்தலைவருடைய திருப்திக்கு அப்பிள்ளை நன்மையாய் உபயோகபபடுத்தப்பட்டிருந்து தற்போதுக்கான சட்டத்தால் விதிக்கப்பட்ட நாலாந் தரத்தின் வாசினையிலும், எழுதவதிலுங் கணக்கிலும் தேர்ச்சிபெற்றதாக ஒரு வித்தியாதரிசியிடமிருந்து "செட்டிபிக்கற்" பதிரம் கைக்கொண்டிருந்தால் பள்ளிக்கூடத்திற்குப் போகத்தேவையிராது.

(*a*) ஒரு புதுப் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க அல்லது பள்ளிக்கூடத்திற்கு போகவேண்டிய வயதுக்குட்பட்ட பிள்ளைகள்படிக்கும் வகுப்பு அல்லது வகுப்புகளில் அங்கிலேய பாஷையையாவது, அல்லது வேறொரு பாஷையையாவது பள்ளிச்கூட அறையில் அல்லது அம்முகாந்திரத்திற்காக முன் உபயோகிக்கப்படாத யாதாமொரு கட்டிடத்தில் கற்பிக்க, விரும்புகிற யாராவது அப்படிப்பட்ட கல்வியை அல்லது பாடத்தை தொடங்கமுன் கிட்டவுள்ள வித்தியாதரிசிக்கு அல்லது உபவித்தியாதரிசிக்கு அறிவிகக வேண்டியது மாத்திரமன்றி, வித்தியாகர்த்தர் அவ்வகுப்பு அல்லது வகுப்புகளைப்பற்றியும் அங்கு படிப்பிக்க நியமித்திருக்கும் பாடங்களைப்பற்றியுங் கேட்கும் சமாசாரத்தைக கொடுக்கவுங் கடவர்.

(*b*) உட்பிரிவுப் பாடசாலைச் சங்கத்தலைவர் தாம் தகுதியென்று காணும் காலத்திற்கு பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டிய வயதுக்குட்பட்ட யாதொரு பிள்ளையையேனும் பாடசாலைக்குப் போகாமலிருக்கும்படி தன்னிஷ்டத்திற்கு உத்தரவுகொடுக்கலாம்.

நுவரெலியாக் கச்சேரி,
1918 ம் ஞு ஏப்றில்மீ.

எம். எம். வடர்பர்ன்,
சங்கத் தலைவர்.

---

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நரிகமத்தில் கற்குளி தோண்டுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 16,798. குறிச்சி—நுகேகொட.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | டவற்றககவத்த .. | இரண்டு தென்னமரங்கள் உள்ளது .. | உடிகம ஆராட்சிகே பொடி நோனு | 0 | 0 | 8·8 |
| 2 | பாலுகனத்தவத்த .. | 48 தென்னமரங்கள் உள்ளது .. | பி. பீற்றர் பெரீரா .. | 0 | 2 | 29·1 |
| 3 | ஷை .. | 16 தென்னமரங்கள் உள்ளது .. | ஷை .. | 0 | 1 | 11 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஷப்புக்கொள்ள அரசசட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞு செப்டம்பர் மாசம் 23 ந் தேதியிலன்று 12·15 மணிககு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ம் ஞு ஓகஸ்டுமீ 21 ந உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாணம் அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு நீர்கொழும்பு ரோட்டிலிருந்து வத்தல கெக்கித்த ரோட்டுக்கு போகிறதற்கு வழிஉண்டாக்கிற என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 16,802. குறிச்சி—வத்தல.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | திற்றிககவத்த .. | தென்னமரங்களும், ஓட்டால் வேய்ந்த மாட்டுக்கொட்டிலின் பகுதியும் கட்டிடத்தின் அத்திவாரமும் உள்ளது | எத்திகே அல்பேற்று சில்வா .. | 0 | 0 | 16·42 |

எடுத்துக கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனககுக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஷப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைககொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞு செப்டம்பர்மாசம் 23 ந் தேதியிலன்று 12 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அககாணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1918 ம் ஞு ஆகஸ்ற்மீ 21 ந உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வதுளை றெயில் போடுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 2. குறிச்சி—யற்றிக்கிந்த பிரிவின் கும்பல்வலகோறளையிலுள்ள கொட்டுவெல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| Ne | சவுத்தாம் எஸ்ரேற் .. | 15 வருஷம்சென்ற தேயிலைமரங்கள் உளளன .. | டெமோதிர ரீ கொம்பனி .. | 0 | 0 | 4·75 |
| Nf | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 2·50 |
| Ng | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 0·50 |
| 103 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 2 |
| 104 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 3·50 |
| 105 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 3·50 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஎப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ௵ அற்பசி மாதம் 2 ௨ தேதியிலன்று காலை 1 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என் முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1918 ம் ௵ ஆவணி௴ 22 ௨.

எவ். மார்ஷல்,
அரசாட்சி ஏசெண்டுக்காக.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,010, மாத்தளை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணி௴ 30 ௨ தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

மத்திய மாகாணம் மாத்தளை டிஸ்திறிக் மாத்தளை கிழக்கைச்சேர்ந்த பல்லசியபத்தில் (றத்தோட்ட பட்டணத்தில்) றத்தோட்டையிலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்குறிக்குங்காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் 6,862.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 6 .. | றோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 0 10 |

எல்லைகளாவன: வடக்கு-மாத்தளையிலிருந்து கம்மதுவவுக்கு போகும் றோட்டு; கிழக்கு-யோசப் கொஸ்தாவும் சகோதரர்களும் உரித்தாடும் ஸ்பிறிங்வில தோட்டம், மேற்படியார் உரித்தாடும் கலுபொலலந்த; தெற்கு-யோசப் கொஸ்தாவும் சகோதரர்களும் உரித்தாடும் கலுபொலலந்த, கிராமத்தாருக்குரிய (றோட்டுக்கு சேமிக்கப்பட்ட) கலுபொலலந்த: மேற்கு-மாத்தளையிலிருந்து கம்மதுவவுக்கு போகும் றோட்டு.

II.—பிரதமபடம் 6,862.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 10 .. | றோட்டுக்கு சேமிக்கப்பட்ட நிலம் .. .. .. | 0 0 17 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய வடகாகொட்டுவ; கிழக்கு-யோசப் கொஸ்தாவும் சகோதரர்களும் அசநேரிஸ் பாஸ்வும் உரித்தாடும்வடகாகொட்டுவேவத்த; தெற்கு-டாவித் அப்புகாமி உரித்தாடும் கறந்தகொல்ல; மேற்கு-மாத்தளையிலிருந்து கம்மதுவவுக்கு போகும் றோட்டு.

*இங்கிலீசின் மூன்றாம் பாகம் 1613 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.
[மாத்தளை வி. உ. 1—1918.]

---

[அறிவித்தல் இல. 7,011, காலி.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தஙகளுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணி௴ 30 ௨ தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எ. எல். குறேஸ்மன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எ. எல். குறேஸ்மன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் காலி டிஸ்திறிக்கைச்சேர்ந்த கங்கபொடபத்தில் மாப்பலகம என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

I.—பிரதம படம் 526.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 559 | கலுகோட்டாக்கேகொலவின்ன .. | 0 3 39 | 562B | கலுகோட்டக்கேதெனிய .. | 1 0 13 |
| 559A | கொக்ககாவிலதெனிய .. .. | 0 1 38 | | | |
| 561 | எற்றகாவிலஒவிற்ற .. .. | 0 0 10 | | | 5 0 22 |
| 562 | கொக்ககாவிலதெனிய .. .. | 2 2 2 | | | |

*இங்கிலீசின் மூன்றாம் பாகம் 1614 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

எல்லைகளாவன: வடக்கு-இம்புல்கேனதொல, முடியால் விற்கப்பட்ட எற்றகாவில (325,079 ம் உ. ப. ல் காணும் காணி), கலுகோட்டக்கே ஓதிறிஸ்வும் மறுபேரும் உரித்தாடும் கலுகோட்டக்கேவத்த; கிழக்கு-பாழ்நிலகட்டளைச்சட்டத்தின் பிரகாரம் முடிக்குரியதென தீர்க்கப்பட்ட மல்கொடகலே, ஓர் ரேரூட்டு, (168,503 ம் உ. ப. ல் காணும் காணி), இம்புலேனதொல, கிராமத்தாருக்குரிய எற்றம்பகல்லியத்த; தெற்கு-168,504 ம் உ. ப. ல் காணும் காணி, முடி உரித்தாடும் கொக்காவில, கிராமத்தாருக்குரிய எற்றக்காவிலதெனிய, (43,366 ம் உ. ப. ல் காணும் காணி) கிராமத்தாருக்குரிய குடாமுகலான; மேற்கு-கிராமத்தாருக்குரிய குடாமுகலான, (156,880 ம் உ. ப. ல் காணும் காணி).

II.—பிரதமபடம் 526.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 564 .. | இம்புலேகேனெதெனியவும் எற்றகாவிலதெனியவும் .. .. | 8 2 39 |

எல்லைகளாவன: வடக்கு-ஓர் தொல, பாழ்நிலகட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட எற்றகாவிலகேன்யாய, இம்புல்கேனதொல; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதாகத் தீர்க்கப்பட்ட எற்றகாவிலகேன்யாய; தெற்கு-156,880 ம் உ. ப. ல் காணும் காணி, இம்புல்கேனதொல, 156,880 ம் உ. ப. ல் காணும் காணி, கிராமத்தாருக்குரிய குடாமுகலன; மேற்கு-கிராமத்தாருக்குரிய குடாமுகலான, ரேரூட்டு, கிராமத்தாருக்குரிய குடாமுகலான.

[காலி வி. உ. 2—1918.]

---

[அறிவித்தல் இல. 7,012, அம்பாந்தோட்டை.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஹு (ஓகஸ்ற்) ஆவணிமீ 30 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எ. எல். குரூஸ்மன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக் குண்டேனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எ. எல். குரூஸ்மன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கைச்சேர்ந்த திருவபத்து மேற்கில் வல்கநெலிய என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் படப்பிரதிகளில் *விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

I.—பிரதமபடம் 316.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 1½ .. | ஆராச்சிலாக்கெ வெகட (குளக்கட்டு) .. .. .. | 0 0 17 |

எல்லைகளாவன: வடக்கு-வித்தாரனதெனிய கிராம எல்லை; கிழக்கு-டொன் கறலிஸ் ஒபய சிங்கவும் மறுபேரும் உரித்தாடும் தெமட்டவலயாய; தெற்கு-டொன் கறலிஸ் ஒபயசிங்கவும் மறுபேரும் உரித்தாடும் தெமட்டவலயாய, பாழ்நில கட்டளைச் சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட ஆராச்சிலாக்கே வெகட (குளம்); மேற்கு-பாழ்நிலக் கட்டளைச் சட்டத்தின்படி முடிகக்குரியதென தீர்க்கப்பட்ட ஆராச்சிலாக்கே வெகட (குளம்.)

II.—பிரதமபடம் 316.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 41½ .. | தெபரகஸ்வெவ கண்டிய (குளக்கட்டு) .. .. .. | 0 0 18 |

எல்லைகளாவன: வடக்கு-டொன் கறலிஸ் எதிரவீரவும் மறுபேரும் உரித்தாடும் மாகேன; கிழக்கு-திச்சட் சர்ன சூரிய ஜயசேகரவும் மறுபேரும் உரித்தாடும் கஸ்தெக்கெமுல்லன, றன்கொத்மலெ பாண்சாலகாறர் உரித்தாடும் வெகரகாவயாய; தெற்கு-றன்கொத்மல பான்சாலகாறர் உரித்தாடும் வெகரகாவயாய; மேற்கு-பாழ்நில கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட தெபரகஸ்வெவ.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1615 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அம்பாந்தோட்டை வி. உ. 14—1918.]

---

[அறிவித்தல் இல. 7,013, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ஹு (ஓகஸ்ற்) ஆவணிமீ 30 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டேனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாக்கல் டிஸ்திறிக் கிரியால கற்பத்தைச்சேர்ந்த டிவிகந்தாயே கோறளையில் சந்திரயாக என்னும் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 3 பேட்சு விலாசமுடையதும் 4,516 ம் பிரதமபடத்தில் 2,773 ம் காணித்துண்டாய்க் காட்டப்பட்டதும் சாமானியமாய் றோட்டுச்சேமிப்பு என்னும் பெயரினால் அறியப்பட் அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-கிராமத்தாருக்குரிய (றோட்டுக்கு சேமிக்கப்பட்ட) மெதகும்புற; கிழக்கு-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதெனத் தீர்க்கப்பட்ட அலுத்வெவயேன்யாய; தெற்கும் மேற்கும்-பாழ்நிலக் கட்டளைச்சட்டத்தின்படி முடிக்குரியதென தீர்க்கப்பட்ட றோட்டு.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1615 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 107—1918.]

---

[அறிவித்தல் இல. 7,014, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணி௴ 30 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம்,1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனு தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் கிரியால காற்பத்தைச்சேர்ந்த கெற்றகயே கோறளையில் தொலுவ என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 3 பேட்சு விசாலமுடையதும் 1,211 ம் பிரதமபடத்தில் 24A ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் தெவற்ற (றோட்டு) என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. இதற்கெல்லைகளாவன: வடக்கு-கொஸ்கொல்லகந்தயாலை தெனுவெற உரித்தாடும் கொலொன்காமுல்லகஅல்ல; கிழக்கு-கொஸ்கொல்லகந்தயாலே தெனுவெற உரித்தாடும் கொலொன்காமுல்லகஅல்ல, திகனேஆரச்சிலாகே பண்டிநெயிடே உரித்தாடும் மதுகாமுலகஅல்ல; தெற்கு-திகனே ஆரச்சிலாகே பண்டிநெயிடே உரித்தாடும் மதுகாமுல்லகஅல்ல; மேற்கு-திகனேஆரச்சிலாகே பண்டிநெயிடே உரித்தாடும் மதுகாமுல்லகஅல்ல, முடியால் விற்கப்பட்ட அம்பகாஇலகல (329,706 ம் உ. ப. ல் காணும் காணி).

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1616 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 108—1918.]

---

[அறிவித்தல் இல. 7,015, குருநாக்கல்.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினும் தங்களுககுண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1918 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணி௴ 30 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர், என். ஏ. கம்றன் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

என். ஏ. கம்றன்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

வடமேல் மாகாணம் குருநாகல் டிஸ்திறிக் கற்றுகம்பொல காற்பத்தைச்சேர்ந்த யற்றிக்கா கோறளை தெற்கில் குலிய பிற்றிய என்னும் கிராமத்திலுள்ள இத்துடனணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே 5 பேட்சு விசாலமுடையதும் 978 ம் பிரதமபடத்தில் 4E ம் காணித்துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் றோட்டுச்சேமிப்பு என்னும் யரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு. அதற் கெல்லைகளாவன: வடக்கு-முடியால் விற்கப்பட்ட பொறலுவத்த (285,796 ம் உ. ப. ல் காணும் காணி); கிழக்கு-கிராமத்தாருக்குரிய பள்ளியவத்த; தெற்கு-நறம்மல்லவிலிருந்து மாதம்பைக்குப் போகும் றோட்டு; மேற்கு-கிராமத்தாருக்குரிய றோட்டுக்குச் சேமிக்கப்பட்ட நிலம்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 1616 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[குருநாக்கல் வி. உ. 109—1918.]

---

[அறிவித்தல் இல. 7,016, இரத்தினபுரி.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணி௴ 30 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே இரட்டினப்பிறை கச்சேரியில் சபறகமுவை மாகாணம் அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகளை அல்லது காணித்துண்டுகளை அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

பி. கொன்ஸ்றன்றயின்,
அரசாட்சி ஏசென்று.

### சொல்லப்பட்ட காணிகளின் விவரம்.

இத்துடனணைத்திருக்கும் படத்தில்* விவரித்தபடி கீழ் சொல்லப்படும் காணிகள் சபறகாமுவை மாகாணத்து இரட்டினப் பிறை டிஸ்திறிக் குறுவிற்றிகோறளை மெதபற்றி உள்ள ந்துறன யென்னும் கிராமத்திலிருக்கும்.

I.—பிரதம படம் 2 ம் நிம்பர் புலக்ஸோர்வே. பிரதமபடம் நிம்பர் 53.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 1 .. | கிரிஅடுவேளமூகளான .. .. .. .. | 16 2 36 |

எல்லையாவன : வடக்கு-ஜே. எஸ். பீரிஸ்உடன் இன்னும் சிலரும் உரித்தாடும் கிரிஅதுவேள ஹேனயும் கிரிஅதுவேள தெனியயும், முடிக்குரிய கிரிஅதுவேள மூகலானையும்; கிழக்காலும் தெற்காலும்-எல்லாவள யென்னும் கிராமத்து எல்லை; மேற்கு-ஜே. எல். பீரிஸ் உடன் சிலரும் உரித்தாடும் கிரிஅதுவேளஹேன.

II.—நிம்பர் படம. பிரதமபடம் நிம்பர் 53.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 2 .. | கிரிஅதுவேளமூகலான .. .. .. .. | 0 2 16 |

எல்லையாவன: வடக்கு-மனிகதொல; கிழக்கு-எல்லாவள கிராமத்து எல்லை; தெற்கு-முடிக்குரிய கிரிஅதுவேள மூகளான; மேற்கு-ஜே. எஸ். பீரிஸ் உடன் சிலரும் உரித்தாடும் கிரிஅதுவேளதெனிய.

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 1617 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

### கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

1918 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1919 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 30 ந் திகதி வரைக்குமுள்ள கல்லடித் துறைக்குத்தகுகயையும் அதனைச்சார்ந்த நாவற்குடாத் துறைக் குத்தகையையும் கேட்க விரும்புவோரின் கேள்விக்கடிதங்கள் 1918 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 14 ந் திகதி சனிககிழமை 12 மணி வரைக்கும் ஏசன்றரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தக் கேள்வியையாயினும் ஏற்றுக்கொள்ளாதுவிட ஏசன்றருக்குத் தத்துவமுண்டு. அந்தத் தத்துவத்துக் கமைவாக உயர்ந்த கேள்விக்காரனே குத்தகைக்காரனாக கவனிக்கப்படுவான்.

3. கேள்வி கேட்பதற்காக அச்சடியன் போம் கச்சேரியில் பெற்று இரு பிரதி எழுதி உறையிலிட்டு உறையின் மூலையில் "கல்லடித்துறைக் குத்தகை" என எழுதி ஏசன்றருககு விலாசமிட்டு அனுப்பவேண்டியது.

4. கச்சேரியில் இருபது (20) ரூபா கட்டி பற்றித்துண்டு காட்டினால் குறித்த கேள்விப் போம் கொடுக்கப்படும்.

5. கேள்வித் தொகை குறைவாக விருந்தால் குத்தகையை பிரசித்த ஏலத்தில் கூறி விற்கப்படும்.

6. குத்தகைவாங்கியவன் உடனே முழுத்தொகையில் பத்திலொன்றைக் கட்டவேண்டும். தேசாதிபதி யயர்களால் கேள்வி அங்கிகாரம்பெற்று முப்பது நாட்களுக்குள் முழுத்தொகையின் அரைவாசிக்குச் சரியான ஆதனப்பிணையை அல்லது மூன்றில் ஒரு பங்கு காசுப்பிணையைக் கட்டவேண்டும்.

7. கேள்விக்காரன் தான் கொடுக்கும் பிணை உறுதியை இராசாவின் தரணி சோதித்து முடிவுபண்ணுதற்கும் கவனஞ்சொல்வதற்கும் பிணைஉறுதி யெழுதுவதற்கும் ஆதனத்தை மதிப்பிடுவதற்கும் பிணைஉறுதியைப் பதிவதற்கும் உண்டான செலவையும் 1917 ம் ஆண்டின் 16 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி முத்திரைச் சலாரையும் கொடுக்கவேண்டும்.

8. காணிகள் ஒற்றி ஈடு முதலியனவுக்குட்படாதவெனக் காணிபதிவுக் கந்தோர் றிஜிஸ்ருரின் "சேட்டிபிக்கெற்" பெற்று உறுதிகளுடன் அணைத்தனுப்ப வேண்டியது. பிணை கொடுப்பவனே யிதற்குச் செலவிறுக்க வேண்டும்.

9. 1896 ம் ஆண்டின் 3 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்திற்கும் மற்றும் பொருத்தனைகளுக்கும் அமைவாக குத்தகைகாறன் நடக்கவேண்டியது. பொருத்தனைகளின் காப்பிகள் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

10. வேண்டிய விபரங்களைக் கச்சேரியில் கேட்டு அறியலாம்.

சீ. ஈ. டி. பின்ரே,
கிழக்கு மாகாணத்து அரசாட்சி ஏசன்றருக்காக.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1918 ம் ஆண்டு ஆவணிமீ 15 ந் உ.

---

### தொழிலுக்குங்படாதவரின் அறிவித்தல்.

கொளும்பு கொள்ளுப்பிற்றி இல. ௭௪ ம் இடத்திலிருக்கும் தாந்துலேகே பீறர் மார்செல் பிறனெண்டு வாகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் கட்டளைச்சட்டத்தின் 1B செடியிலில் உ ம் பிரிவின்படி இன்று துவர்க்கம் மூன்று மாசத்துக்குப்பின். கனம் றெஜிஸ்திறர் ஜெனறல் அவர்களிடம் புத்தளம் டிஸ்திறிகருச் சிங்களம் நொத்தாரிஸ் வேலை செய்வதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டிருப்பதை இதனால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொள்ளுப்பிற்றி, இல. ௭௪,
1918 ஆவணி உ௬, உ.

றீ. பீறர் எம். பிறனெண்டு.